பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 429** **நாள்: 11.12.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் செல்லப்பிராணிகளுக்கான உரிமம் வழங்கும் சிறப்பு முகாம்கள் 12.12.2025, 13.12.2025 மற்றும் 14.12.2025 ஆகிய மூன்று நாட்களுக்கு 8 இடங்களில் நடத்தப்படவுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் செல்லப்பிராணிகள் மருத்துவமனைகளில் செல்லப்பிராணிகளுக்கு வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி செலுத்துதல், மைக்ரோசிப் பொருத்துதல் மற்றும் உரிமம் வழங்கும் பணிகள் கடந்த 08.10.2025 அன்று முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**செல்லப்பிராணிகள் மருத்துவமனை விவரம்**

| வ.எண் | செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்கள் | மண்டலம் |
|---|---|---|
| 1. | திரு.வி.க. நகர் செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம் | மண்டலம்-6 |
| 2. | புளியந்தோப்பு செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம் | மண்டலம்-6 |
| 3. | லாயிட்ஸ் காலனி செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம் | மண்டலம்-9 |
| 4. | நுங்கம்பாக்கம் செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம் | மண்டலம்-9 |
| 5. | கண்ணம்மாப்பேட்டை செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம் | மண்டலம்-10 |
| 6. | மீனம்பாக்கம் செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம் | மண்டலம்-12 |
| 7. | சோழிங்கநல்லூர் நாய் இனக்கட்டுப்பாட்டு மையம் (சிறப்பு முகாம்) | மண்டலம்-15 |

இந்நிலையில் செல்லப்பிராணிகள் உரிமையாளர்களின் வேண்டுகோளை ஏற்று செல்லப்பிராணிகளுக்கான உரிமம் வழங்குவதற்கான காலக்கெடு 14.12.2025 வரை

நீட்டிக்கபட்டுள்ளது. இதுநாள்வரை 98,523 செல்லப்பிராணிகளின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, 54,576 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்பணியை மேலும் சிறப்புடன் செயல்படுத்த ஏதுவாக 12.12.2025, 13.12.2025 மற்றும் 14.12.2025 ஆகிய மூன்று நாட்களுக்கு செல்லப்பிராணிகளுக்கான உரிமம் வழங்கும் சிறப்பு முகாம்கள் கூடுதலாக கீழ்காணும் 8 இடங்களில் தினசரி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**சிறப்பு முகாம்கள் நடைபெறும் இடம்**

| வ. எண் | மண்டலங்கள் | சிறப்பு முகாம்கள் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|
| 1. | மணலி மண்டலம், வார்டு-22 | மாநகராட்சி சமுதாயக் கூடம், தேவராஜன் தெரு, மணலி, சின்ன சேக்காடு, சென்னை- 600 068. |
| 2. | மாதவரம் மண்டலம், வார்டு-32 | மாநகராட்சி சமுதாயக் கூடம், சண்முகபுரம், சூரப்பட்டு, சென்னை- 600 060. |
| 3. | தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-48 | மாநகராட்சி சமுதாயக் கூடம், பார்த்தசாரதி நகர், பழைய வண்ணாரபேட்டை, சென்னை- 600 021. |
| 4. | அம்பத்தூர் மண்டலம், வார்டு-91 | டன்லப் மைதானம், காமராஜபுரம், அம்பத்தூர், ( மண்டல அலுவலகம் எதிரில்) |
| 5. | அண்ணாநகர் மண்டலம், வார்டு-100 | மாநகராட்சி சமுதாயக் கூடம், கும்மாளம்மன் கோவில் தெரு, கீழ்பாக்கம், சென்னை - 600 010. |
| 6. | வளசரவாக்கம் மண்டலம், வார்டு-147 | மாமன்ற உறுப்பினர் அலுவலகம், மாந்தோப்பு, ஆலப்பாக்கம், சென்னை -600095. |
| 7. | அடையாறு மண்டலம், வார்டு-175 | மாநகராட்சி சமுதாயக் கூடம், டாக்டர் அம்பேத்கர் நகர், 22வது குறுக்குத் தெரு, வேளச்சேரி (மேற்கு) சென்னை- 600 042. |
| 8. | பெருங்குடி மண்டலம், வார்டு-188 | மாநகராட்சி சமுதாயக் கூடம், மயிலை பாலாஜி நகர், மடிப்பாக்கம், சென்னை -600 091. |

12.12.2025, 13.12.2025 மற்றும் 14.12.2025 ஆகிய நாட்களில் கூடுதலாக 8 இடங்களில் நடைபெறும் இச்சிறப்பு முகாம்களில் செல்லப்பிராணிகளைப் பதிவு செய்தல், வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்துதல், மைக்ரோசிப் பொருத்துதல், உரிமம் வழங்குதல் உள்ளிட்ட சேவைகள் இலவசமாக தினசரி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மேற்கொள்ளப்படும்.

எனவே, செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் இதனைப் பயன்படுத்தி 14.12.2025க்குள் தங்களின் செல்லப் பிராணிகளுக்கான உரிமத்தை கட்டாயம் பெற்றுக் கொண்டு அபராதம் செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**